ஆடு, மாடுகளை அடைக்க பயன்படும் கொட்டகை அல்ல. இங்கு தான் மாணவர்களுக்கு பாடம் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

தொப்பூர் அருகே

தகர கொட்டகையில் வகுப்புகள்; மாணவர்கள் அவதி

புதிய கட்டிடம் கட்ட பெற்றோர் வலியுறுத்தல்

தொப்பூர், பிப்.9–

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஒன்றியம் தொப்பூர் ஊராட் சிக்குட்பட்ட உம்மியம்பட்டியில் அரசு ஊராட்சி ஒன்றிய நடு நிலைப் பள்ளி செயல் பட்டு வருகிறது.

இந்த பள்ளியில் 1–ம் வகுப்பு முதல் 8 வகுப்பு வரை 324 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளி ஆசிரியைகளின் தொடர் முயற்சி மற்றும் தேர்ச்சி விகிதத்தாலும் மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் உள்ளிட்ட வற்றால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இப்பள்ளியில் சேர்ப்பதற்கு அதிகளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் ஒவ்வொரு ஆண்டும் அதிக அளவில் மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது.

தமிழக அரசு மிகவும் பழுதடைந்து தரமற்ற முறையில் இருக்கும் பள்ளி கட்டடங்களை இடிப்பதற்கு உத்தரவிட்டது. இதனை அடுத்து தருமபுரி மாவட்ட கலெக்டரின் உத்தரவின் பேரில் பழுதடைந்த வகுப்பறை கட்டடம் இடிக்கப்பட்டது. அப்போது பள்ளிக்கு மாணவர்கள் வராததால் சிரமங்கள் எதுவும் ஏற்படவில்லை. தற்பொழுது பள்ளிகள் அனைத்தும் திறக்கப்பட்டு மாணவர்கள் பள்ளிக்கு வர தொடங்கியதால் அவர் களுக்கான வகுப்பறை இல்லாத நிலை ஏற்பட்டது.

தகர கொட்டகைக்குள் மாணவர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

தற்போது 6 வகுப்பில் மட்டும் 44 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

இந்த மாணவர்களுக்கு வகுப்பறை இல்லாத நிலை ஏற்பட்டதால். அப்பள்ளியில் படித்த முன்னாள் மாண வர்கள் ஒன்றிணைந்து உடனடியாக தகரத்தால் ஆன கொட்டகை ஒன்றை தயார் செய்து சுற்றிலும் நரம்பினால் ஆன வலைகள் அமைத்து தற்காலிக வகுப்பறையை ஏற்படுத் தியுள்ளனர். இந்த தற்காலிக வகுப்பறை ஆனது சாலை ஓரத்திலேயே உள்ளது. மேலும் இச்சாலையில் அதிக அளவில் வாகனப் போக்குவரத்து உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

புதிய கட்டிடம்

பழைய கட்டிடங்கள் இடிக்கப்படும் பொழுது காம்பவுண்ட் சுவரும் இடிக்கப்பட்டது அதனால் தற்போது தடுப்புச் சுவர்களும் இல்லாததால் பாதுகாப்பற்ற சுழல் நிலவி வருகிறது. எனவே இப்பகுதியில் சிறப்பாக செயல்பட்டு நல்ல தேர்ச்சி விகிதத்தை கொடுத்து வரும் பள்ளிக்கு மாணவர்களின் நலன் கருதியும் மற்றும் அவர்களின் பாதுகாப்பிற்காகவும் மாவட்ட நிர்வாகம் உடனடியாக தடுப்புச்சுவர் மற்றும் புதிய வகுப்பறை கட்டிடம் அமைக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சாலையில் அமர்ந்து லாரி டிரைவர்கள், மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட போது எடுத்த படம்.

அரூர் அருகே பரபரப்பு:

நடுரோட்டில் இருந்த மின்கம்பத்தில் லாரி மோதி விபத்து

லாரி டிரைவர்கள் மறியல் போராட்டம்

அரூர், பிப்.9–

தருமபுரி மாவட்டம் அரூர் வழியாக செல்லும் திருப்பத்தூர் சேலம் தேசிய நெடுஞ்சாலையில் 4 வழிச்சாலை அமைக்கும் பணிகள் நடைபெறுகிறது. இதையடுத்து, அரூர் கச்சேரிமேடு சாலை சந்திப்பில் சாலை விரிவாக்கப் பணிகள் நடைபெறுகிறது.

அரூர் அரசு மருத்துவமனை எதிரே தார் சாலையின் மையப் பகுதியில் மின் கம்பம் உள்ளது. இந்த மின் கம்பத்தை அகற்றாமல் தார் சாலை அமைத்து, வாகனங்கள் சென்று வரும் வகையில் போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மொரப்பூரில் இருந்து அரூர் நோக்கி பழனி என்பவர் ஓட்டி வந்த லாரி நேற்று மாலை சாலையின் மையப் பகுதியில் இருந்த மின் கம்பத்தில் மோதியது. இதில் அதிர்ஷ்டவசமாக உயிர்சேதம் இல்லை.

இதனால், மின்சார கம்பம் சேதமடைந்தது. மின் கம்பம் சேதமடைந்ததை அடுத்து மின்சார வாரியத்துக்கு லாரி உரிமையாளர் ரூ. 50 ஆயிரம் பணம் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

சாலை மறியல்

மின்சாரம் வாரியம் ரூ. 50 ஆயிரம் பணம் கேட்டதை தொடர்ந்து லாரி உரிமையாளர்கள், லாரி டிரைவர்கள் அரூர்–ஊத்தங்கரை தேசிய நெடுஞ் சாலையில் மறியலில் ஈடுபட்டனர். இதையடுத்து மின்கம்பத்தை அகற்றாமல் சாலை அமைத்தது, எச்சரிக்கை பலகை வைக்காத ஒப்பந்ததாரரை கண்டித்து லாரி டிரைவர்கள் கோஷமிட்டனர்.

மேலும் விபத்தில் சேதமடைந்த லாரிக்கு தார் சாலை அமைக்கும் ஒப்பந்ததாரர் இழப்பீடு வழங்க வேண்டும் என வலியுறுத்தினர். இதையடுத்து, அரூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் லட்சுமணதாஸ் மற்றும் மின்வாரிய அதிகாரிகள், டிரைவர்களிடம் பேச்சுவார்த்தை செய்தனர். இதனால் லாரி டிரைவர் கள் மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர். லாரி டிரைவர்களின் திடீர் போராட்டம் காரணமாக அரூர்–ஊத்தங்கரை தேசிய நெடுஞ்சாலையில் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தருமபுரியில்

கொலை மிரட்டல் விடுத்த வாலிபர் கைது

தருமபுரி, பிப்.9–

தருமபுரி சின்னதடங்கம் பகுதியை சேர்ந்தவர் வெங்கடேஷ் (வயது 49). தொழிலாளி. இவர் தனது மகளை பள்ளியில் விடுவதற்காக மோட்டார் சைக்கிளில் அழைத்து சென்றார். அப்போது வெற்றி (27) என்ற வாலிபர், தனது மோட்டார் சைக்கிளை வெங்கடேஷ் மோட்டார் சைக்கிள் மீது மோதியதாக தெரிகிறது. இதுதொடர்பாக அவர் தட்டி கேட்ட போது, வெற்றி தகாத வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இதுபற்றி வெங்கடேஷ், தருமபுரி டவுன் போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து வாலிபர் வெற்றியை கைது செய்தனர்.

போச்சம்பள்ளி அருகே

மோட்டார் சைக்கிள் மோதி முதியவர் பலி

மத்தூர், பிப்.9–

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே உள்ள கோணனூர் பகுதியை சேர்ந்தவர் சின்னசாமி (வயது 75). இவர் வீட்டில் இருந்து அப்பகுதியில் உள்ள மளிகை கடைக்கு நேற்று மளிகை பொருட்கள் வாங்க சென்றார். அப் போது வீரமலை பகுதியில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் முதியவர் சின்னசாமி மீது மோதியது. இதில் அவருக்கு படுகாயம் ஏற்பட்டது. உடனடியாக அவரை போச்சம்பள்ளி அரசு மருத்துவமனையில் சிகிச்சை காக சேர்த்தனர். பின்னர் மேல் சிகி ச்சைகாக தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி சின்னசாமி இன்று அதிகாலை இறந்தார். இது குறித்து போச்சம்பள்ளி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



தேன்கனிக்கோட்டையில்

போலீசார் கொடி அணிவகுப்பு

தேன்கனிக்கோட்டை, பிப்.9–

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலையொட்டி பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்க வேண்டி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காவல்துறை சார்பில் பல்வேறு இடங்களில் போலிஸ்கொடி அணிவகுப்பு நடத்தி வருகின்றனர். இதனையொட்டி தேன்கனிக்கோட்டையில் நேற்று போலீசார் கொடி அணிவகுப்பு பேரணி நடைபெற்றது. இந்தக் கொடி அணிவகுப்பை கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு ராஜா தொடங்கி வைத்தார். இதையடுத்து போலீசார் நகரின் முக்கிய சாலைகளான ராஜாஜி சாலை, பஸ் நிலையம், ஓசூர் சாலை, பைபாஸ் சாலை, நேதாஜி சாலை, காந்தி சாலை வழியாகச் சென்றனர். இதில் துணை போலீஸ் சூப்பிரண்டு கிருத்திகா, இன்ஸ் பெக்டர்கள் நாகராஜ் , குமரன், சுப்பிரமணி , சம்பூர்ணம் , சப்–இன்ஸ்பெக்டர் தினேஷ் மற்றும் போலீசார் கலந்து கொண்டனர். அதேபோல் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலையொட்டி கெலமங்கலத்தில் போலீஸ் கொடி அணிவகுப்பு நடை பெற்றது. மேலும் பதற்றமான வாக்குச்சாவடிகளை கண்காணிக்கும் வகையில் கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு ராஜா தலைமையில் டி.எஸ்.பி. கீர்த்திகா முன்னிலையில் அணிவகுப்பு நடைபெற்றது. இதில் இன்ஸ்பெக்டர்கள் நாகராஜ், சுப்பிரமணி, குமரன், சம்பூர்ணம், சப்–இன்ஸ்பெக்டர்கள் சிவராஜ், கார்த்திகேயன், சிற்றரசு மற்றும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்கள் போலீசார் 150 பேர் கலந்துகொண்டனர்.

மத்தூர் அருகே

மணல் திருட முயன்ற 3 பேர் மீது வழக்கு

மத்தூர், பிப்.9–

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் அருகே உள்ள நடுபட்டு ஆற்று பகுதியில் அரசு அனுமதியின்றி மணல் கடத்துவதாக மத்தூர் போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதன் பேரில் போலீசார் அப்பகுதியில் ரோந்து சென்று பார்த்த போது கருங்கல் நகர் பகுதியை சேர்ந்த ரமேஷ் (வயது 36), அதே பகுதியை சேர்ந்த குமார் (48), பிரபு (43) ஆகிய 3 பேரும் 4 யூனிட் மணலை ஆற்று பகுதியில் குவித்து வைத்து கடத்த முயற்சி செய்துள் ள்ளனர். இதில் பிரபு, குமார் இருவரும் தலைமறைவாகி விட்டனர். ரமேசை போலீசார் கைது செய்து ஓசூர் சிறையில் அடைத்தனர்.

கிருஷ்ணகிரி அருகே

கட்டிட மேஸ்திரி மாயம்

கிருஷ்ணகிரி, பிப்.9–

கிருஷ்ணகிரி அருகே போதிநாயனப்பள்ளி எம்.ஜி.ஆர். நகரை சேர்ந்தவர் அண்ணாமலை (வயது 33). கட்டிட மேஸ்திரி. இந்த நிலையில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 17–ந் தேதி வீட்டை விட்டு வெளியே சென்ற அண்ணாமலை அதன்பின்னர் வீடு திரும்பவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த அவரது மனைவி தீபா, கணவரை பல இடங்களில் தேடி பார்த்தார். ஆனால் காணவில்லை. இதுகுறித்து கிருஷ்ணகிரி மகராஜகடை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

தேன்கனிக்கோட்டையில்

தியாகராஜசுவாமி கோவில் கும்பாபிஷேக விழா

தேன்கனிக்கோட்டை ,பிப்.9–

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை பட்டாளம்மன் கோவில் தெருவில் உள்ள தியாகராஜசுவாமி கோவில் கும்பாபிஷேக விழா நடை பெற்றது. விழாவையொட்டி தீர்த்த குட ஊர்வலம் நடைபெற்றது முன்னதாக தியாகராஜசுவாமி கோவில் உள்ள சீதா ராமர், லட்சுமணர், ஆஞ்சநேயர் ஆகிய சுவாமிகளுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேக விழா நடைபெற்றது. தொடர்ந்து புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்ட சுவாமி சிலைகள் மீதும் கலசங்களை மீதும் புனித நீர் ஊற்றி சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பிறகு கோவில் கோபுரத்தில் உள்ள கலசங்களுக்கும் சிறப்பு பூஜைகள் செய்து வேத விற்பன்னர்கள் மந்திரங்கள் ஓத புனித நீர் தெளிக்கப்பட்டது. இதில் ஆயிரக்கனக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

கிருஷ்ணகிரி அருகே

வேலை கிடைக்காத விரக்தியில் வாலிபர் தற்கொலை

கிருஷ்ணகிரி, பிப்.9–

கிருஷ்ணகிரி காந்தி நகர் பசீர் முகமது லே அவுட் பகுதியை சேர்ந்தவர் விக்னேஷ் (வயது 30). இவர் என்ஜீனியர்ங் படித்து விட்டு வேலை கிடைக்காமல் இருந்து வந்தார். இதனால் மனமுடைந்து விரக்தி அடைந்த நிலையில் விக்னேஷ் யாரிடமும் பேசாமல் இருந்து வந்தார். இதையொட்டி நேற்று வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து கிருஷ்ணகிரி தாலுகா போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தருமபுரி

பஸ் நிலைய பகுதியில் சுற்றித்திரியும் வெறிநாய்கள் கூட்டம்

வாகன ஓட்டிகள்– பொதுமக்கள் பாதிப்பு

தருமபுரி, பிப்.9–

தருமபுரி பஸ் நிலையத்தில் தினமும் வெளியூர்களில் இருந்து ஆயிரக்கணக்கான பயணிகள் வந்து செல்கின்றனர். இந்த நிலையில் பஸ் நிலையத்தை சுற்றியுள்ள வீதிகளில் வெறிநாய்கள் கூட்டம் சுற்றி திரிந்து வருவதால் வாகன ஓட்டிகள்– பயணிகள் அவதிப்பட்டு வருகிறார்கள்.

குறிப்பாக சின்னசாமி நாயுடு தெரு, ஆறுமுக ஆசாரி தெரு, முகமது அலி கிளப் ரோடு உள்ளிட்ட பகுதிகளில் 10 முதல் 15 நாய்கள் வரை கூட்டம் கூட்டமாக வருகின்றன. அப்போது ரோட்டில் நடந்து செல்லும் பெண்கள், குழந்தைகள் மற்றும் வயதான முதியவர்களை விரட்டி துரத்துகின்றன. இதனால் நாய்க்கடிக்கு பயந்து தடுமாறி ஓடும் போது பலர் கீழே விழுந்து காயம் அடைகின்றனர்.

தருமபுரி சின்னசாமி நாயுடு தெருவில் சுற்றித்திரியும் வெறிநாய்கள் கூட்டம்.

இதேபோல் சிலர், அதிகாலை 4 மணி முதல் 6 மணிவரை பஸ்நிலையத்தை சுற்றி வாக்கிங் செல்வது வழக்கம். அப்போதும் இந்த வெறிபிடித்தநாய்கள் துரத்தி செல் கின்றன. இதனால் நாய்களின் துரத்தலுக்கு பயந்து ரோட்டில் விழுந்து காயம் அடைகின்றனர்.

அதுமட்டுமில்லாமல் ஓட்டல்கள், இறைச்சி கடைகளில் மீதமாகும் உணவை நாய்கள் சாப்பிடுவதால் அவைகள் வெறிபிடித்தப்படி அங்குமிங்கும் ஓடி ஒன்றுக்கொன்று சண்டையிட்டு வருவதால் பொதுமக்கள் பீதியடைந்து வருகின்றனர்.

எனவே நகராட்சி அதிகாரிகள் உடனடியாக ரோடுகளில் சுற்றித்திரியும் வெறிநாய்கள் கூட்டத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்களும், பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பணிகள் முடிவுற்ற போதிலும்

மக்கள் பயன்பாட்டுக்கு வராத நல்லம்பள்ளி பேருந்து நிலையம்

எப்போது விடிவுகாலம் பிறக்கும்? பொதுமக்கள் எதிர்பார்ப்பு

தொப்பூர், பிப்.9–

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்தில் புதிதாக தாலுகா பிரிக்கப்பட்டு நல்லம்பள்ளி பகுதியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காகவும் விவசாய பொருட்களை சந்தைப் படுத்துவதற்காகவும் பேருந்து நிலையம் அமைப்பதற்காக 2017 ஆம் ஆண்டு அப்போதைய தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் அன்புமணி ராமதாஸ் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 30 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு பேருந்து நிலையம் கட்டப்பட்டது.

பின்னர் 2019ஆம் ஆண்டு பணிகள் முடிக்கப்பட்டு திறக்கப் பட்டன. அப்பொழுதும் மக்கள் பயன் பாட்டிற்கு கொண்டு வர முடியாமல் பேருந்து நிலையம் கிடப்பில் போடப் பட்டது.

பின்னர் மழை நீர் வடிகால் வசதி, சாக்கடை கால்வாய் வசதி, நெடுஞ்சாலையில் இருந்துபேருந்து நிலையத்திற்கு இணைப்பு சாலை வசதி உள்ளிட்ட வற்றிக்காக மீண்டும் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கப் பட்டது.

சாலை பணிகள் உள்ளிட்ட அனைத்து பணிகள் முடிவுற்ற போதிலும் இன்றுவரை பேருந்து நிலையம் மக்கள் பயன் பாட்டிற்கு கொண்டுவரப் படவில்லை.

மேலும் இப்பேருந்து நிலையம் பயன் பாட்டுக்கு வருமா? வராதா? கேள்வி பொது மக்களிடையே எழுந்துள்ளது.

மேலும் நல்லம்பள்ளி ஒன்றியத்திற்கு உட்பட்ட 32 ஊராட்சியை சேர்ந்த பொதுமக்கள் குடும்ப அட்டை பெறவும், ஆதார் கார்டு புகைப்படம் எடுக்கவும் நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரவேண் டியுள்ளது.

வட்டாட்சியர் அலுவலகம் நல்லம்பள்ளி பேருந்து நிலையம் அருகில் உள்ள சந்தை பகுதியில் அமைந்துள்ளது.

தருமபுரி மற்றும் கிராம பகுதியில் இருந்து வரும் அரசு பேருந்துகள் நல்லம்பள்ளி பேருந்து நிலையத்தை திரும்பிக்கூட பார்க்காமல் செல்வதால் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் லளிகம் சாலையில் உள்ள பிரிவு ரோடு பகுதியில் இறங்கி நடந்து வர வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இதுபோன்ற இதுமக்களுக்கு ஏற்படும் இன்னல்களை தவிர்க்கவும் பேருந்து நிலையத்தை பொதுமக்கள் பயன் பாட்டிற்கு கொண்டு வர மாவட்ட நிர்வாகம் நட வடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

TANEJA AEROSPACE AND AVIATION LIMITED

Regd. Office: Belagondapalli Village, Thally Road, Denkanikottai Taluk, Krishnagiri Dist., Belagondapalli - 635114, Tamil Nadu, India | **Phone :** 04347-233508,| **Fax :** 04347-233414
E-mail : secretarial@taal.co.in | **Website :** www.taal.co.in | **CIN :** L62200TZ1988PLC014460

EXTRACT OF THE STATEMENT OF CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDED DECEMBER 31, 2021

(INR in Lacs, unless otherwise stated)

Sr. No.	Particulars	Quarter ended		Nine Months ended	Year Ended
		31-Dec-21	31-Dec-20	31-Dec-21	31-Mar-21
		(Unaudited)			(Audited)
1	Total Income from operations (Net)	967.20	780.87	2,406.76	3,481.50
2	Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items)	387.15	254.49	985.21	826.79
3	Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and/or Extraordinary Items)	(0.74)	254.49	597.32	826.79
4	Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and/or Extraordinary items)	(17.28)	202.47	487.08	621.85
5	Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)]	(17.28)	202.47	487.08	620.12
6	Equity share capital	1,246.54	1,246.54	1,246.54	1,246.54
7	Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year	-	-	-	9,210.06
8	Earnings Per Share (of Rs. 5/- each) (not annualised):				
	(a) Basic earnings / (loss) per share (INR)	(0.07)	0.81	1.95	2.49
	(b) Diluted earnings / (loss) per share (INR)	(0.07)	0.81	1.95	2.49

Notes :

1 **Additional information on standalone financial results is as follows:**

Particulars	Quarter ended		Nine Months ended	Year Ended
	31-Dec-21	31-Dec-20	31-Dec-21	31-Mar-21
	(Unaudited)			(Audited)
Revenue from Operations	950.43	772.62	2,346.25	3,452.01
Profit before exceptional items and tax	387.21	254.49	985.30	827.69
Profit before tax	(0.68)	254.49	597.41	827.69
Profit after tax	(17.22)	202.47	487.17	622.75

2 The above is an extract of the detailed format of standalone and consolidated financial results for quarter and nine months ended filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the standalone and consolidated financial results are available on the Stock Exchange website (www.bseindia.com) and also on the Company's website (www.taal.co.in).

3 The above results have been reviewed by the Audit Committee & approved by the Board of Directors at their respective meetings held on February 08, 2022.

For Taneja Aerospace and Aviation Limited
Ramesh Jaiswara
Whole Time Director

Place : Bangalore
Date : February 08, 2022

வருவாய் கோட்ட அலுவலகம்
கிருஷ்ணகிரி
மே.எ.அ.தி.மு.6666/2021
நாள்: 31.12.2021
கோவிந்தசாமி
த/பெ. வேடியப்பன்
திம்மாபுரம்–1
கிருஷ்ணகிரி மாவட்டம்.
– மனுதாரர்
இடையே
வட்டாட்சியர் அவர்கள்
கிருஷ்ணகிரி.
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மனுதாரர் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறார். மேற்படி மனுதாரர் கோவிந்தசாமி தனது தாய் குப்பச்சியம்மாள் என்பவர் 24.04.2005 அன்று இறந்து விட்டார். மேற்படியார் இறப்புத் தேதியில் யாருக்காவது ஏதாவது ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளி யிட்ட 15நாட்களுக்குள் கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
இங்ஙனம்,
வருவாய் கோட்ட அலுவலகம்
கிருஷ்ணகிரி

வட்டாட்சியர் அலுவலகம்
காரிமங்கலம்
ஒ.மு.171/2021/அ4
நாள்: 27.01.2022
மணி, த/பெ. (லேட்) மாதன்
உத்தாண்டிகவுண்டனூர் கிராமம்,
பைசுஅள்ளி அஞ்சல்
காரிமங்கலம் வட்டம்
தருமபுரி மாவட்டம்.
– மனுதாரர்
இடையே
கோட்டாட்சியர் அவர்கள்
தருமபுரி.
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மனுதாரர் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறார். மேற்படி மனுதாரர் மணி தனது சகோதரி மாது (எ) மாதம்மாள் என்பவர் கடந்த 10.10.2005 அன்று இறந்து விட்டார். மேற்படியார் இறப்புத் தேதியில் யாருக்காவது ஏதாவது ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளி யிட்ட 15 நாட்களுக்குள் தருமபுரி கோட்டாட்சியர் அலுவலகத்தில் தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
இங்ஙனம்,
வட்டாட்சியர் அலுவலகம்
காரிமங்கலம்

வட்டாட்சியர் அலுவலகம்
தருமபுரி
ந.க.4134/2021/அ7
நாள்: 10.12.2021
கார்த்தி
2/66, தா.குளியனூர்
கொல்லஅள்ளி (அஞ்சல்)
தருமபுரி.
– மனுதாரர்
இடையே
கோட்டாட்சியர் அவர்கள்
தருமபுரி.
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மனுதாரர் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறார். மேற்படி மனுதாரர் கார்த்திக் தனது தாத்தா மொண்டி (எ) பெரமன் என்பவர் கடந்த 01.05.2004 அன்று இறந்து விட்டார். மேற்படியார் இறப்புத் தேதியில் யாருக்காவது ஏதாவது ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளி யிட்ட 15 நாட்களுக்குள் தருமபுரி கோட்டாட்சியர் அலுவலகத்தில் தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
இங்ஙனம்,
வட்டாட்சியர் அலுவலகம்
தருமபுரி

கிருஷ்ணகிரி வருவாய்
கோட்டாட்சியர் சமூகம்
476/2022
திருப்பதி
த/பெ. சென்றாயன் (எ) படகாலன் சிப்பாய்
151(2), கள்ளியூர் (Vill),
மேகலசின்னம் பள்ளி (Po),
கிருஷ்ணகிரி (Tk & Dt).
– மனுதாரர்
எதிராக
வட்டாட்சியர்
கிருஷ்ணகிரி
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மனுதாரரின் தந்தை சென்றாயன் (எ) படகாலன் சிப்பாய் என்பவர் கடந்த 10.05.1988 அன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். இறப்பை பதிவு செய்யக்கோரி மனுதாரர் தாக்கல்செய்துள்ள மேற்படி மனுமீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்திடம் 10 நாட்களுக்குள் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும்.
– உத்திரவுப்படி –
V.PARTHIBAN, B.A.,B.L.,
Advocate & Notary Public
Krishnagiri-635001.

வட்டாட்சியர் அலுவலகம்
பாலக்கோடு
மே.எ.தி.மு.சி.ப.43/2022/அ6
நாள்: 02.02.2022
G.செல்வம்
சொக்கம்பட்டி கிராமம்,
ஜிட்டாண்டஅள்ளி Po,
பாலக்கோடு வட்டம்,
தருமபுரி மாவட்டம்.
– மனுதாரர்
இடையே
வட்டாட்சியர் அவர்கள்
பாலக்கோடு
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மனுதாரர் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறார். மேற்படி மனுதாரர் G.செல்வம் தனது தாத்தா கோவிந்தன் என்பவர் 04.02.1996 அன்று இறந்து விட்டார். மேற்படியார் இறப்புத் தேதியில் யாருக்காவது ஏதாவது ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியிட்ட 15 நாட்களுக்குள் பாலக்கோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
இங்ஙனம்,
வட்டாட்சியர் அலுவலகம்
பாலக்கோடு

வட்டாட்சியர் அலுவலகம்
பாலக்கோடு
மே.எ.தி.மு.சி.ப.42/2022/அ6
நாள்: 02.02.2022
முனிராஜ்
த/பெ. (லேட்) செல்லன்
சொக்கம்பட்டி கிராமம்,
ஜிட்டாண்டஅள்ளி Po,
பாலக்கோடு வட்டம்,
தருமபுரி மாவட்டம்.
– மனுதாரர்
இடையே
வட்டாட்சியர் அவர்கள்
பாலக்கோடு
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மனுதாரர் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறார். மேற்படி மனுதாரர் முனிராஜ் தனது தந்தை செல்லன் என்பவர் 01.02.2000 அன்று இறந்து விட்டார். மேற்படியார் இறப்புத்தேதியில் யாருக்காவது ஏதாவது ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளி யிட்ட 15 நாட்களுக்குள் பாலக்கோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும்என்பதை அறியவும்.
இங்ஙனம்,
வட்டாட்சியர் அலுவலகம்
பாலக்கோடு